# ஆயர் மடல்.....

அன்புக்குரியவர்களே,

ஆன்மீக வசந்தகால வாழ்த்துக்கள்.

இந்த உருமாற்றத்தின் காலத்தில் கல்வாரி சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை நோக்கி பார்க்க, பார்த்து பார்த்து தியானிக்க, உருமாற நாம் அழைக்கப்படுகிறோம். கல்வாரி சிலுவைக்கு முன் கர்த்தர் நமக்கக்காக 40 நாட்கள் வனாந்திரத்தில் பசி பட்டினியோடு, உறங்காமல் பலவித மான சாத்தானுடைய சோதனைகளை நீடிய பொறுமை யோடு சகித்து மாபெரும் வெற்றி கொண்டதை நினைத்து பார்பதோடு நிறுத்தி விடாமல், அந்த வெற்றியை விசுவாசத்தோடு தரித்துக் கொண்டவர்களாக, இந்த அருள் காலத்தில் கிறிஸ்துவுக்குள் நான் யார்? கிறிஸ்துவுக்குள் எனக்கிருக்கிற சிலாக்கியங்கள் என்ன, அதிகாரங்கள் என்ன என்பதை தனித்திருந்து, விழித்திருந்து, ஜெபித்து சாத்தா னின் சோதனைகளை மேற்கொள்வோம். இயேசுவின் பாடுகளை தியானித்து, தியானித்து சிந்தாமல், சிதறாமல் நம்மை உருமாற்றக் கூடிய அமிர்தமாக, அருமருந்தாக எண்ணிப்பார்த்து இந்த லெந்து கால சிறப்பு ஆராதனை களை தவற விடாமல் பயன்படுத்தி உருமாறுவோம், உயிர்த்தெழுந்த பண்டிகைக்கு ஆயத்தமாவோம்.

இப்படிக்கு,
உங்கள் ஆயர்,
Rev. Christopher Rajendran

# *Meditation* (தியானம்)

அன்பிற்குரியவர்களே,

தியான வசனம்:1 கொரிந்தியர் 1:18.

( 1 Corinthians 1:18 )

WISDOM AND THE POWER OF GOD IS the CROSS

இந்த உலகத்தின் பார்வையில் பாடுபட்டு, இரத்தம் சிந்தி, கல்வாரிசிலுவையில் தொங்குகின்ற இயேசு, ஒரு கைவிடப்பட்ட, பெலவீனமான மனிதராக தெரியலாம் .அவரும், அவரை சார்ந்த தேவராஜ்ஜியமும் தோற்கடிக்கப் பட்டது போல தோற்றமளித்தாலும், உண்மையில் இயேசு கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளும், மரணமும் மனிதகுல இரட்சிப்புக்கு ஊற்றும் உறைவிடமும், அடிப்படையுமாக இருக்கிறது. தேவ ராஜ்ஜியத்தின் நற்செய்தியே இயேசு கிறிஸ்துவின் சிலுவைப்பாடும், மரணமும், அவரது உயிர்த் தெழுதல் ஆகும். (By HIS DEATH AND RESURRECTION WE ARE SAVED AND ALIVE FOR ETERNAL LIFE ). This is the Sum and substance of the GOSPEL .

WISDOM of GOD :

தேவஞானம் என்பது மனித ஞானத்தை விட மிகவும், மிகவும் உயர்ந்தது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வெறும் சிலுவையைப் பற்றிய உபதேசத்தில் என்ன தேவஞானம் இருக்கிறது? என்று உலகத்தார் கேட்க லாம் . இதுவா தேவ ஞானம் என்று எள்ளி நகையாடலாம் .கெட்டு தேவ ஞானத்தை மனிதனுடைய பகுத்தறிவைக் கொண்டு புரிந்து கொள்ள முயன்றால் இயேசுகிறிஸ்துவின்

சிலுவைப்பாடுகள் பயித்தியக்காரத்தனமாக தோன்றும். தேவ ஞானத்தை புரிந்து கொள்ள நமக்கு முதலாவது தேவ தயவும், தேவ கிருபையும், தேவ அருளும், தேவனுடைய ஆவியின் உதவியும் வேண்டும். மேலும் மனிதனுக்கு குழந்தையைப் போன்ற எளிய விசுவாசமும், நம்பிக்கையும், பயபக்தியும், தேவன் மீது அளவற்ற அன்பும் வேண்டும். சுயபெருமையை, இதுவரை கற்ற அறிவையும், உலகஞானத்தையும் தேவனுடைய பாதத்தில் தாழ்மையோடு விட்டுவிட வேண்டும். அப்பொழுது தேவன் நம்மீது மனதுருகி 1கொரிந்தியர் 2:12 ன் படி தேவனி லிருந்து புறப்படுகிற ஆவியைப் பெற்று தேவனால் நமக்கருளப்பட்ட ஞானத்தை, அதாவது உலகத்தின் ஆவியால், ஞானத்தால் புரிந்துகொள்ள முடியாத இயேசுவின் சிலுவையைப் பற்றிய தேவ இரகசியங்களை ஆழமாக புரிந்துகொள்ள முடியும். 1கொரிந்தியர் 2:1-16 ன் படி முழுமையாக இயேசுவின் சிந்தையைப்பெற்று, கிறிஸ்துவோடு கூட நாமும் சிலுவையில் அறையப்பட்டி ருக்கிறோம் என்ற விசுவாசத்தோடு, இனி வாழ்வது கிறிஸ்துவுக்காக என்ற புரிந்துணர் வோடு வாழ்வோம். கிறிஸ்துவுக்காக எந்த ஒரு தியாகத்தையும் செய்ய முன்வருவோம். இந்த தேவ ரகசியமான, தேவ ஞானமான சிலுவையில் அறையப்பட்ட இயேசு, பாவத்தினாலும், சாபத்தினாலும், மரணபயத்தினாலும், உலக பிரபஞ்ச சாத்தானின் அடிமைத்தனத்தினாலும் இருக்கிறவர்களுக்கு பயித்திய மாகவே புரிந்துகொள்ளப்படுவார்.( 1 கொரிந்தியர் 1:24).

## Power of God:

சிலுவையில் அறையப்பட்ட இயேசு, கெட்டுப் போன

உலகத்தை இரட்சிக்க வல்லமையுடையவர். அந்த இரட்சிப்பின் வல்லமையைத்தான் power of God என்று சொல்லுகிறோம். இந்த power ஐ புரிந்துகொள்ளாத பேதுருவை இயேசு அப்பாலே போ சாத்தானே என்று கடிந்து கொண்டார். இயேசுவின் சிலுவைச்சாவில் தன்னை தோற்கடிக்கக் கூடிய இவ்வளவு பெரிய தேவ வல்லமை இருக்கிறதை சாத்தான் உண்மையில் அறிந்திருக்க வில்லை. .

விசுவாசிகளாகிய நாம் ஒன்றை மிக உறுதியாக விசுவாசிக்கவேண்டும். கிறிஸ்துவோடு கூட சிலுவையில் அறையப்பட்ட மெய்க்கிறிஸ்தவ வாழ்கை வாழ்கிற ஒரு விசுவாசி ஒரு POWER OF God ஆக இருக்கிறான் என்று. வல்லமையுள்ள பார்வோனை எகிப்திலே திக்குவாயான் என்று சொன்ன மோசே எப்படி மேற்கொண்டான் தேவ ஞானத்தால், தேவபெலத்தால், கொடிய, படுபயங்கரமான கோலியாத்தை அற்ப சிறுவன் தாவீது எப்படி வீழ்த்தினான்? தேவஞானத்தால், தேவபலத்தால்! நாமும் எப்பொழுதும் தேவபெலத்தை, தேவஞானத்தை சார்ந்து வாழ்வோமாக.

**ஆன்புடன்.**
**உங்கள் ஆயர்**

Rev. Christopher Rajendran.

# Projects for March 2018

## Congregation:

சமீபத்தில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்திருக்கிற பில்லி கிரகம் பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

## Womens fellowship:

புனித வெள்ளி ஆராதனை முடிவில் பெண்கள் ஐக்கியமாக சபையாருக்கு பொங்கல்கஞ்சியும், புதினா சட்னியும் தயாரித்து பரிமாறவும்.

## Mens Fellowship:

இயேசு கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? விவாதிக்கப்படும்.

## Youth Fellowship:

புனித வெள்ளி ஆராதனை அன்று சபையாருக்கு நீர் மோர் தயாரித்து பரிமாறவும்.

## Junior Church:

DRAW CALVARY SCENE OF CRUCIFIXION.

## *செயலரிடமிருந்து.......*

**கி**றிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே! இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன். கடந்த மாதத்தில் நம்மை கிருபையாய் காத்து வழி நடத்தி ஒரு புதிய மாதத்தை காண கிருபை புரிந்த தேவனுக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம்.

கடந்த மாதம் 9-ம் தியதி நடைபெற்ற நமது திருச்சபையின் கன்வென்ஷனுக்ககாக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். அந்த நாளின் சிறப்பு செய்தியாளராக

நம்மோடு கலந்து கொண்டு அந்நாளுக்குரிய தேவசெயதியை பகிர்ந்த Bro. Freddy Joseph அவர்கட்கும் நாம் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

மேலும் ஷார்ஜா திருச்சபையின் சபை நாள் விழா மற்றும் SKD Malayalam திருச்சபையின் அறுப்பின்பண்டிகை ஆகியவற்றின் அழைப்பிதழுக்கிணங்க அவர்களோடு சேர்ந்து நாமும் அந்நாட்களை ஆசரிக்க கிருபை புரிந்த தேவனுக்கு நன்றி செலுத்துவோம். கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

அது போல 23-ம் தியதி நமக்கு சிறப்பு செய்தி அளித்த நமது காரியக்குழு அங்கத்தினர் திரு.ஹெர்சில் ஹாரிஷ் அவர்களின் தந்தையார் Pr. ஆல்பர்ட் கெர்சோன்.(Pr. Albert Gershon) அவர்கட்கும் நம் நன்றிகளை கூறுவோம்.

இன்னும் நாம் வரும் நாட்களில் செயல்படுத்த திட்டமிட்டிருக்கும் ஒவ்வொரு ஆராதனைக்காகவும் தொடர்ந்துஜெபிபபோம். அது போன்று தொடர்ந்து வரும் நாட்களின் எல்லா ஊழியங்களிம் இணைந்து செயல்படுவோம். தேவன் நமக்கு அப்பேர்பட்ட வாய்பினை அருள ஜெபிப்போம்.

***M. நேசமணி.***

## <u>பெண்கள் ஐக்கியச் சங்கம்</u>

*அன்புக்குரிய தாய்மார்களே,*

நமக்காக இயேசு பாடுபட்டார், நொறுக்கப்பட்டார், காயப்பட்டார், பாரசிலுவை சுமந்தார் என்று விசுவாசிக்கும்

பொழுது நம்முடைய குடும்ப சுமை, வேலை சுமை எல்லாம் காணாமல் போய்விடும். புதிய பெலத்தை, சக்தியை பெற்றுக் கொள்கிறோம். பாடு படுகிற நம்மை போன்ற பெண்களுக்கு சிலுவையில் பாடுபட்ட இயேசு உதவ வல்லவராய் இருக்கிறார். ஆதலால் சோர்ந்து போகாமல் சிலுவையை தாண்டி உயிர்த்தெழுதலை நோக்கிப் பார்போமே!

சிலுவையில்லாமல் உயிர்த் தெழுதல் இல்லை. ஆதலால் பாடுகளை கண்டு பயப்படாமல், பாடு களை சகிக்க சிலுவைப்பாடுகளை இந்த லெந்து நாட்களில் தியானித்து தேவகிருபையை பெற்றுக்கொள்வோம்.

உங்கள் ஆயரம்மா

*Mrs.Angel .C.R.*

# Keeping Focused

General Bradford was definitely an unusual general. He was known far and wide for both his infinite patience and love as well as for His justice and wrath. His soldiers loved him dearly—and for good cause. His orders were always good, and he personally found a way to care for each of the soldiers who volunteered for his little band.

Michael had recently joined the general's band, and was now quite anxious to prove himself a good soldier.

His first task was to learn to march. The general shook his head and gently admonished the young private, "Don't let

your desire to show off distract you. True marching isn't about lifting those knees in show; it's about putting one step in front of the other in sync with my commands."

Michael hung his head. He had allowed the thought of what others would think to distract him soon find out, however, just how easily he could get distracted.

The first time Michael actually had the opportunity to march, he lifted his knees up nearly to his chest each step in an effort to look like a good marcher. He desperately wanted to do a good job to please the general!

The general shook his head and gently admonished the young private, "Don't let your desire to show off distract you. True marching isn't about lifting those knees in show; it's about putting one step in front of the other in sync with my commands."

Michael hung his head. He had allowed the thought of what others would think to distract him from really doing his job.

Michael tried again, this time not worrying about how he looked. Yet he had such a hard time keeping his eyes above the horizon! His eyes seemed to constantly wander to the things or people around him. Then he'd catch sight of the general and remember his command to look above the horizon. Would he ever learn? "George," Michael called reprovingly, "your step is a little fast, and wipe the grin off

your face.And Scott, loosen up your arms and let them swing a little more natural and—"

"I said flight halt!"

Only after walking several paces in front of the rest of the troop did Michael finally hear the command. He didn't think he could ever forget the general's reproof, "Cadet, fall back in line. Keep your own eyes and ears attentive and let me take care of the others."

Michael stepped back in line. He was beginning to realize that keeping focused would be a moment-by-moment battle. It was SO easy to get distracted!.

**"Fight the good fight of faith, lay hold on eternal life, where unto thou art also called, and hast professed a good profession before many witnesses - 1 Timothy 6:12 KJV"**

*Diniya Sunshine*

## லெந்து காலம் ஒரு "யூ-டர்ன்"

## (A "U-Turn" During Lent)

சாம்பற் புதன்கிழமையிலிருந்து லெந்து நாட்கள் ஆரம்பித்து விட்டது. நாமும் நாற்பது நாட்களுக்கு உபவாசம் எடுக்க தொடங்கி விட்டோம் எடுக்கிறோம். வாழ்க்கையை புதுப்பித்துக் கொள்ளும் பொன்னான வசந்த நாட்கள் அவை.

தங்களை வெறுத்தும், ஒறுத்தும் ஆண்டவரது பாடுகளில் கொஞ்சம் பங்கேற்க ஈவாக கிடைத்த நாட்கள். தபசு நாட்கள் என்பது திருச்சபைக்கு ஒரு வசந்த காலம். லெந்து காலம் பற்றி வேதாகமத்தில் நேரடியான உபதேசங்கள் இல்லா விட்டாலும், பக்தி விருத்தி உண்டு பண்ணும் காரணத்தால் இந்நாட்கள் அன்று முதல் இன்று வரை பெரும்பாலான கிறிஸ்தவர்களால் சிறப்புடன் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. நாற்பதுக்கும் மேற்ப்பட்ட நாட்களுக்கு உபவாசம் கடை பிடிக்கப்பட்டு வருவதின் விளைவாக விசுவாசி தன் ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற வேண்டும்.

ஆகவே, லெந்து காலம் என்பது நம்முடைய வாழ்கையில் முக்கியமான அங்கம் வைக்கிறது. இது மிக முக்கியமான காலமாகும். நம்முடைய ஆன்மீக வாழ்கையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் காலம். அநேக விசுவாசிகள் இந்நாட்களில் மாமிச உணவுகளை உண்பது கிடையாது, ஆடம்பரமான அணிகலன்களை அணிவது கிடையாது, பட்டாடைகளை உடுத்துவது கிடையாது, கேளிக்கைகளில் கலந்து கொள்வது கிடையாது. இன்னும் பல பல காரியங்கள்........ இப்படி அநேக காரியங்களை பாரம்பரியமாக அனுசரிக்காமல், வேதாகமத்தின் காலத்தில் மக்கள் தங்களை வெறுத்து, தாழ்மையாக்கி, இரட்டை உடுத்தி சாம்பலில் உட்கார்ந்து உபவாசித்ததை போல நாம் நம்மை வெறுமையாக்கி தாழ்மையோடு உபவாசிக்க வேண்டும். “நான் உபவாசம் பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி” (தானி 9:3) “இந்த செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டின போது, அவன் தன் சிங்காசனத்தை விட்டு எழுந்து, தான் உடுத்தியிருத்த உடுப்பைக் கழற்றிப் போட்டு, இரட்டை உடுத்திக் கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான். (யோனா 3:6) இப்படி அநேக வசனங்கள் வேத புத்தகத்தில் உள்ளது. கிறிஸ்தவர்கள் தங்களது

உள்ளத்தின் அடி ஆழத்திலிருந்து ஆவிக்குரிய நிலையை பரிசோதனை செய்து கிறிஸ்துவுடன் தனது உறவை நெருக்கமாகவும், அன்றாட வேத வாசிப்பு, தியானம், ஜெபம், உபவாசம், ஈகை, தியாகம் ஆகியவைகளில் நம்மை பயிற்றுவித்து கொண்டு அனுசரிக்க வேண்டும்.

வாழ்க்கை என்ற சாலையில் நாம் வேகமாக பயணம் செய்து கொண்டிருக்கிறோம். வெகு தூரம் வந்து விட்டோம். ஆனால் திடீரென்று நாம் தவறான பாதையில் பயணம் செய்தது புரிகிறது. அப்போது நாம் என்ன செய்கிறோம்? என்ன செய்ய வேண்டும்?

நாம் ஒரு நண்பரை பார்க்க காரில் போகிறோம். நாம் போக வேண்டிய இடம் 20 நிமிடத்தில் வந்து விடும் ஆனால் 45 நிமிடமாகியும் குறிப்பிட்ட இடம் வரவில்லை. அப்போது தான் தவறான பாதையில் வந்திருப்பதை புரிந்து கொள்ளுகிறோம். இனி என்ன செய்வது? நல்ல வேளை “யூ-டர்ன்” வருகிறது. காரை திருப்பி போக வேண்டிய இடத்தை நோக்கி பயணமாகிறோம் அல்லவா!

அது போல, நம்முடைய வாழ்க்கையில் தவறான பாதையில் பயணம் செய்தாலும் அவ்வப்போது அதை நமக்கு ஆண்டவர் “யூ-டர்ன்” மூலம் அடிக்கடி உணர்த்துகிறார். லெந்து காலம் தான் “யூ-டர்ன்”.

அதாவது நாம் உபவாசிப்பது மட்டுமல்ல, தாழ்மையை கடைபிடிப்பது மட்டுமல்ல, மனம் மாற வேண்டும். லெந்து காலம் நம்மை மாற்றும்.. ஆண்டவரின் பாதங்களில் நம்மை ஒப்படைத்து தாழ்மையோடும், கருத்தோடும் உபவாசிப்போம். ஆண்டவர் நம் ஒவ்வொருவருடைய உபவாசத்தை அங்கிகரித்து நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

*M. Nesamony.*

# TRUE STORY

Many years ago, on New Year's Day, a very rich man who had no wife, no children, no other family members, decided to invite all the employees of his villa to dinner.

He called the staff and asked them to sit at the table.
In front of everyone there was a BIBLE and a small sum of MONEY
After everyone was installed, the man asked:

"What would you prefer to receive as a gift: this BIBLE or this MONEY"?

Do not be shy, you can choose what you want.

THE GUARDIAN was the first to react:

"Sir, I would love to receive the Bible, but since I have not learned to read, the money will be more useful to me."

THE GARDENER was the second to speak:

"Sir, my wife is very sick and that's why I need more money, otherwise I would choose the Bible for sure!"

The third was the COOK:

"Sir, I like reading to tell the truth, it's one of the things I like to do, but I work so hard that I never find time to flip through a magazine, let alone the Bible. I will take the money."

In the end, it is the turn of the boy who takes care of the animals of the villa,

And as the gentleman of the villa knew that the boy's family was very poor, he stepped forward and said:

"Surely you too want the money, do not you?" So you can buy food to have a good dinner at home and buy new shoes.”

BUT THE BOY,

As for him, surprised everybody with his answer:

"It would not hurt to buy a turkey and other tasty food to share with my parents and siblings, I also need a pair of new shoes because mine are very old. even so, I will choose the Bible, I have always wanted one. My mother taught me that the Word of God is worth more than gold and that it is more tasty than a honeymoon.”

After receiving the Bible, the boy immediately puffed it out and found two envelopes inside.

In the first, there was a check that was 10 times higher than the money on the table. In the second, there was a document that made (whoever would choose the Bible), the heir to the wealth of the rich!. Faced with the boy's emotion and the astonishment of the other servants, the gentleman opened one of the Bibles and read aloud so that everyone could hear:

Psalms 19: 7-10

The law of the LORD is perfect, it restores the soul;

The testimony of the Lord is true, he makes wise the ignorant.

The ordinances of the LORD are righteous, they rejoice the heart;

The commandments of the Lord are pure, they light up the eyes.

The fear of the Lord is pure, it subsists forever;

The judgments of the Lord are true, they are all just.

They are more precious than gold, than a lot of fine gold; They are sweeter than honey, than the one that pours rays.

May God give us wisdom and help us always make the right choice.

**CECILIYA RAJKUMAR**

## *CHILDREN'S PLACE*

COUNT YOUR BLESSINGS A Joyful 'toon by Mike Waters




Praise the LORD, O my soul, and forget not all his benefits–
– PSALM 103:2 NIV

# Children show your talent



## CHILDRENS' QUIZ FOR THE MONTH

THE GOSPEL ACCORDING TO LUKE (16 to 20)

***1. According to the Gospel of Luke, which are the two masters Jesus refers to?***

*a) God and Satan*
*b) Money and Satan*
*c) God and Money*
*d) Rich and poor*

***2. What was the rich man's request from Hell to Abraham?***

*a) To eat which fell from Lazarus table*

*b) To have a good dinner*

*c) To dip in cool water*

*d) To dip Lazarus finger in water and cool his tongue*

***3. What we can learn from the Samaritan who was healed from Leprosy by Jesus?***

*a) Faith*

*b) Thankfulness*

*c) Praising God*

*d) All of the above*

***4. Where is the Kingdom of God?***

*a) At Jerusalem*

*b) In Heaven*

*c) Within you*

*d) In earth*

***5. In the parable of the Pharisee and the tax collector, "Tax collector" went home justified before God and not Pharisee. Why?***

*a) Because he fasted twice a week*

*b) Because he gave a tenth of all he got*

*c) Because he was a tax collector*

*d) Because he who humbles himself will be exalted*

***6. What is the eligibility to enter the kingdom of God?***

*a) One should be confident of their own righteousness*

*b) One should receive the kingdom of God like a little child*

*c) One should have the key*

*d) One should fast twice a week and give a tenth of all he gets.*

***7. What was Zacchaeu's reaction when Jesus told him "I must stay at your house?"***

*a) He came down at once and welcomed him gladly*

*b) He agreed to give half of his possessions to poor*

*c) He agreed to payback four times, if he has cheated anybody out of anything*

*d) All of the above.*

***8. Jesus said, "My house will be ___________________"***

*a) Heaven*

*b) House of prayer*

*c) Jerusalem*

*d) Bethlehem*

***9. Which is the right statement?***

*a) Give to Caesar what is Caesar's and to God what isGod's.*

*b) Give to Caesar what is God's and to God what isCaesar's.*

*c) Give to Caesar what is God's and to God what is God's.*

*d) Give to Caesar what is Caesar's and to God what isCaesar's.*

***10. Who say there is no resurrection?***

*a) Chief priests*

*b) Scribes*

*c) Caesar*

*d) Some of the Sadducees*

## February - Correct Answers:

1. c –Desiples of Jesus
2. a - Poor
3. c - Glutton

4. d - Faith
5. a - Word of God
6. d – b and c
7. d – a and b
8. a – Hear Him
9. d – None of the above
10. c - Came and looked and passed by on the other side

## *Children who answered correctly:*

1. *Annlin Sophia Nelson*
2. *Angelin Sophia Nelson*
3. *Dennis Roger*
4. *Jesvin Selvakumar*
5. *Diniya Sunshine*
6. *Mervin Samuel*
7. *Easterine Benedicta Raj*
8. *Joshika Vasrhni*
9. *Joshuva Koshy*
10. *Shelbino Pau*
11. *Johan Sanjo*
12. *Jeremiah Alan*
13. *Jemima Ashni*
14. *Roshan Ravindra*
15. *Gain George Rose*
16. *Geovin George Rose*

***Congrats you have done all!!***

# உற்சாகமாய் கொடுப்பது

**“உற்சாகமாய் கொடுப்பவனிடத்தில் தேவன் பிரியமாயய்யிருக்கிறார்” (2 கொரி. 9:7).**

சாதரணமாய் கொடுப்பது வேறு. தேவ அன்பினால் நிறைந்து, உற்சாகமாய் கொடுப்பது வேறு. கர்த்தரை நேசிக்கிறவர்கள் கல்வாரி அன்பினால் உந்தப்பட்டு, தியாகமாய்க் கொடுக்கிறார்கள். உள்ளத்தைப் பார்க்கிற ஆண்டவர், உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் பிரியமா யிருக்கிறார்.

இயேசு தேவாலயத்திற்க்கு வந்தபோது, காணிக்கை பெட்டி அருகே உட்கார்ந்து விட்டார். சில செல்வந்தர்கள் ஆடம்பரமாய் கொடுத்திருக்கலாம். பணக்காரர்கள் தாங்கள் கொடுப்பதை மற்றவர்கள் பார்க்கும்படி கொடுத்திருக்கலாம். ஆனால், கர்த்த ருடைய கண்களோ இரண்டு காசு போட்ட ஏழை விதவவை மீது பிரியமாய் இருந்தது. “அவர்களெல்லோரும் தங்கள் பரிபூரணத் திலிருந்து எடுத்து தேவனுக்கென்று காணிக்கைப் போட்டார்கள். இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனுக்கு உண்டாயிருந்த தெல்லாம் போட்டு விட்டாள் என்றார்” ( லூக்கா 21:4).

தாவீது எப்பொழுதும் உற்சாகமாகவே கர்த்தருக்கு கொடுத்தார். “எங்கள் தேவானகிய கார்த்தாவே உம்முடைய பரிசத்த நாமத்திற்க்கென்று உமக்கு ஒரு ஆலயத்தை கட்டுவதற்க்கு நாங்கள் தரிக்கிற இந்தப் பொருட்கள் எல்லாம் உம்முடைய கரத்திலிருந்து வந்தது. எல்லாம் உம்முடையது. என் தேவனே நீர் இருதயத்தை சோதித்து, உத்தம குணத்தில் பிரியமாயிருக்கிறீர் என்பதை அறிவேன்’ இவையெல்லாம் நான் உத்தம இருதயத்தோடே

மனப்பூர்வமாய்க் கொடுத்தேன்'' (1 நாளா. 29:16, 17) என்று சென்னார். மட்டுமல்லாது ''தேவனே என் செல்வம் பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும், நான் என் முழுப் பிரியத்தையும் வைத்தி ருக்கிற மகாத்துமாக்களுக்கும், அது வேண்டியதாயிருக்கிறது என்று தாவீது சொன்னார். ஆகவே தான் தேவன் தாவீதை மிகவும் நேசித்து ஆசீர்வதித்தார்.

தேவனுக்குப் பிரியமானவர்களே! வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம் (அப். 20:35). அப்படி கர்த்தருக் கென்று உற்சாகமாய் கொடுக்கும்போது நிச்சயமாகவே கர்த்தர் நம்மை வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங் கொள்ளாமல் போகுமட்டும் ஆசீர்வதிப்பார்.

**நெல்சன் சோபித ராஜ்.**

************************************

# பொறாமை - எலும்புருக்கி

*''சொஸ்தமனம் உடலுக்கு ஜீவன்; பொறாமை எலும்புருக்கி'' (நீதி.14:30).*

பொறாமை என்னும் தீயகுணத்தால் ஏற்படும் அழிவுகளை குறித்து திருமறையின் தொடக்கத்திலிருந்தே காணலாம். பெலிஸ்தர்களுக்கு ஈசாக்கின் பேரில் பொறாமை **(ஆதி.26:14)**, ராகேலுக்கு தன் சகோதரி லேயாள் மேல் பொறமை (**ஆதி.30:1**), இஸ்ரவேலர்களுக்கு மோசே, ஆரோன் என்பவர்கள் மீது பொறாமை **(சங்.106:16)**, எப்பிராயீமுக்கு யூதாவின் மேல் பொறாமை **(ஏசா.11:13**), இயேசுவை பொறாமையினாலே சிலுவை மரணத்துக்கு ஒப்புக் கொடுத்தார்கள் **(மத். 27:17, மாற்.15:9).**

பொறாமையினால் எத்தனை நாடுகள், சமுதாயங்கள், குடும்பங்கள் சண்டை போட்டு அழிந்துள்ளது. குடும்பங்களில் வேற்றுமைகள், பிரிவினைகள், வைராக்கியங்கள், விரோதங்கள் போன்ற பிரச்சினைகள் இன்று எல்லா மக்களிடமும் காணலாம்.

பொறாமை கொள்பவர்களுக்கு வரும் அழிவை குறித்து கிரேக்க நாட்டில் பாரம்பரிய கதை ஒன்று உண்டு. புகழ் பெற்ற சிற்பி ஒருவருக்கு சிலை உருவாக்கி, கிரேக்க நாட்டிலுள்ள பட்டணத்தின் முக்கிய இடத்தில் வைத்தார்கள். அந்த சிற்பியின் மீது பொறாமை கொண்ட மற்றொரு சிற்பி அச்சிலையை அழிக்க எண்ணி எவரும் தன்னை பார்க்க முடியாத நள்ளிரவு நேரத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அதன் அடிபாகத்தில் செதுக்கிக்கொண்டே வந்தான். ஒரு மாதமாக இதனைச் செய்த பிறகு அச்சிலை ஆட்டம் கண்டு சிறிது சிறிதாக சாயத் தொடங்கியது. ஒரு நாள் இரவில் அவன் செதுக்கிக்கொண்டே இருந்த போது அவன் மீது சிலை விழுந்து அவனை கொன்று போட்டது.

பொறாமை என்ற காரியமும் கொஞ்ச கொஞ்சமாக நம்மில் வளர்ந்து அதன் விளைவாக நாம் செய்யும் காரியங்கள் ஓர் நாளில் யார் மீது பொறாமை கொள் கிறோமோ அவர்கள் வழியாக நமக்கே அழிவு வந்து விடும்.

எனவே! இயேசு கிறிஸ்துவின் அன்பை ருசித்து அவருடைய பிள்ளைகளாக வாழ்கிற நமக்கு வேதம் போதிக்கின்றது அன்புக்கு பொறாமை இல்லை (**I கொரி.13:4**). பொறாமை உள்ளவர்களாய் நடவாமல் பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக் கடவோம் **(ரோம.13:13).**

வேதத்தை வாசிப்பதும் தியானிப்பதும் மட்டுமல்ல அதை அப்பியாசப் படுத்தி நடக்க முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய சொந்த முயற்சியால் இது முடியாது. அதற்கு பரிசுத்த ஆவியானவருடைய உதவி அவசியம் வேண்டும். ஆவியானவர் தாமே நமக்கு உதவி செய்வாராக.

*M.Nesamony*

• • • • • • • • • • • • •

## வேத வினா விடைப் போட்டி – மார்ச் 2018

(சங்கீதம் 127 முதல் 150 முடிய)

1. கர்த்தர் யாரை தமக்குச் சுதந்திரமாகத் தெரிந்து கொண்டார்?

2. குழந்தைப்பாக்கியத்தை சாலமோன் எவ்வாறு சிறப்பிக்கிறார்?

3. ஒவ்வொரு வசனங்களும் துதியுங்கள் என முடிவடையும் சங்கீதம் யாது?

4. ஐக்கிய வாழ்வை தாவீது எவ்வாறு சிறப்பிக்கிறார்?

5. கர்த்தரின் வழியில் நடக்கும் மனிதன் தன் குடும்ப வாழ்வில் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் என்ன?

6. தேவன் தாவீதுக்கு தயவு செய்கையில் நேருவது என்ன?

7. ஓகு அரசாண்ட தேசம் யாது?

8. தேவனுடைய சமூகத்தில் வாசம் பண்ணுவது யார்?

9. கர்த்தரின் பிரசன்னத்தை வர்ணிக்கும் சங்கீதம் யாது?

10.150-ஆம் சங்கீதத்தில் நாம் காணும் இசைக்கருவிகள் யாவை?

குறிப்பு: விடைகளுக்குரிய அதிகாரமும் வசனமும் குறிப்பிட்டு இம்மாதம் 20 ம் தேதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

**சென்ற மாதத்திற்கான விடைகள்:**

1. கற்பனைகள் நீதியுள்ளவைகள் (119:172)
2. 120
3. செம்மையானவர்கள் (112:4)
4. 118:26
5. பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருப்பது(125:2)
6. இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடை நாமத்தைத் தொழுது கொள்ளுவேன்.(116:13)
7. பலவானுடைய கூர்மையான அம்புகள், சூரைச்செடிகளை எரிக்கும் தழல் (120:4)
8. மனுபுத்திரருக்கு (115:16)
9. தேவனின் சாட்சிகள் (119:24)
10. துன்மார்க்கன் (109:18)

**கடந்த மாத வேத வினா விடைப் போட்டியில் விடைகள் எழுதியவர்கள்**

1. திருமதி. பிப்லின் நெல்சன்
2. திருமதி. ஜெயின் ராஜவேல்
3. திருமதி. ஜெயந்தா ஜாண
4. திருமதி. எபென் A. பிரசாத்
5. திருமதி. சிந்துஜா சதீஷ்குமார்
6. திருமதி. அனிதா சுரேஷ்
7. திருமதி. ராதிகா செல்வகுமார்
8. திருமதி. ஹெப்சிபாய் நேசமணி

9. திருமதி. ஜோனிஷ் ஹெர்சில்
10. திருமதி. ஷீபா பிரகாஷ
11. திருமதி. அனிதா ஜார்ஜ்
12. திரு. ஜார்ஜ் ரோஸ்
13. திருமதி. அகஸ்டா லாறன்ஜஸ்.

* * * * * * * * * * * * * * *

# Worship Timings –March 2018

## SPECIAL PRROGRAMS SCHEDULED

**குருத்தோலை ஞாயிறு *( Palm Sunday)***

***Service 23-3-18 @ 0700 PM in Main Hall***

**விடுமறை வேதாகமப்பள்ளி *VBS***

***24-3-18 – 28-3-18 – Oasis Campus***

**வியாகுல வியாழன் *(Maundy Thursday)***

***Service on 29 -03-18 @ 0730 PM in Ark***

**பெரிய வெள்ளி *(Good Friday)***

***Service30-3-18 @0700 PM in Main Hall***

**உயிர்தெழுந்த நாள் *(Easter )***

***Service 01-04-18 @ 0730 PM in Main Hall***

## Main Worship Hall – Oasis Hospital Campus, Al Ain.

| | | |
|---|---|---|
| First and Third Fridays | 7:00 PM | Communion Service |
| Second & Fourth Fridays | 7:00 PM | Regular Service |
| First and Third Fridays | 6.30 PM | Men's Prayer |
| Second & Fourth Fridays | 6.30 PM | Bible Study |
| Every Friday | 6.15 PM | Junior Church |

## REGULAR MINISTRIES @ PERSONAGE – Jahli

| | | |
|---|---|---|
| First Friday | 11:00 AM | Fasting Prayer |
| Second & Fourth Fridays | 07.00 PM | Gospel Ministry ( Camp visit) |
| Third Saturday | 07.30 PM | Women's Prayer |
| Last day of the Month | 11.30 PM | Month End & Beginning Prayer |

## WEDDING ANNIVERSARY –Mar 2018

| | | |
|---|---|---|
| 07-3-2018 | Mr.Ujin Raj<br>Mrs Sangeetha Ujin Raj | 562725446 |

# BIRTHDAY CELEBERANTS - Mar 2018

| | | | |
|---|---|---|---|
| 1 | 01.0318 | Mr. David Livingston | 050 5432630 |
| 2 | 02.03.18 | Mrs. Vasantha Davidraj | 050 1251782 |
| 3 | 02.03.18 | Mrs.Shaly Jesie | 056 3941817 |
| 4 | 03.03.18 | Mrs.D.Jesubai Sornabalan | 055 6400635 |
| 5 | 06.03.18 | Mr. Derick Gasbath Joy | 050 6677528 |
| 6 | 14.03.18 | Mrs. Radhika Grace | 050 2334421 |
| 7 | 15.03.18 | Mrs. Eben Ashok | 050 7834649 |
| 8 | 17.03.18 | Mr. Joseph Jovin | 055 3171742 |
| 9 | 19.03.18 | Mr.A.S. Kannan | 050 4821006 |
| 10 | 23.03.18 | Ms.Gabrilin U.S.Shasmitha | 056 2725446 |
| 11 | 25.03.18 | Mrs.Rebecca Prabhu | 055 6281237 |
| 12 | 27.03.18 | Master.Johan Sanjo | 055 7309275 |
| 13 | 28.03.18 | Ms. Eastrine Benedicta Raj | 050 3227592 |
| 14 | 28.03.18 | Master.Ridhun Yojit | 055 8146143 |
| 15 | 29.03.18 | Mr.Antony | 055 7011315 |
| 16 | 30.03.18 | Ajin Shah Selvister | 055 9318750 |
| 17 | 30.03.18 | Mr.Derin David Livingston | 050 5432630 |
| 18 | 31.03.18 | Ms. Annlin Sophia Nelson | 055 6028865 |

# A Prayer

Father, with one
word, You can speak
things into
existence, and we
pray if it's Your will,
that You will speak
out on behalf of the
needs of those who
are praying. We ask
that Your provision
will rain down like
manna from heaven.
We pray for those
who are struggling
to survive... to eat...
to pay their bills... to
have a roof over
their head.... Lord,
we ask that You will
show signs that You
are aware and that
You see and that
You are faithful to
provide for Your
children.



Debbie Kay

Ceciliya Rajkumar

## DAILY BIBLE READING March-2018

"Your word is a lamp to my feet and light for my path path" Ps.119:105

| Date | Day | Morning | Evening |
|---|---|---|---|
| 1 | Sun | Luke 15 | Exodus 12:22-51 |
| 2 | Mon | Luke 16 | Exodus 13 |
| 3 | Tue | Luke 17 | Exodus 14 |
| 4 | Wed | Luke 18 | Exodus 15 |
| 5 | Thu | Luke 19 | Exodus 16 |
| 6 | Fri | Luke 20 | Exodus 17 |
| 7 | Sat | Luke 21 | Exodus 18 |
| 8 | Sun | Luke 22 | Exodus 19 |
| 9 | Mon | Luke 23 | Exodus 20 |
| 10 | Tue | Luke 24 | Exodus 21 |
| 11 | Wed | John 1 | Exodus 22 |
| 12 | Thu | John 2 | Exodus 23 |
| 13 | Fri | John 3 | Exodus 24 |
| 14 | Sat | John 4 | Exodus 25 |
| 15 | Sun | John 5 | Exodus 26 |
| 16 | Mon | John 6 | Exodus 27 |
| 17 | Tue | John 7 | Exodus 28 |
| 18 | Wed | John 8 | Exodus 29 |
| 19 | Thu | John 9 | Exodus 30 |
| 20 | Fri | John 10 | Exodus 31 |
| 21 | Sat | John 11 | Exodus 32 |
| 22 | Sun | John 12 | Exodus 33 |
| 23 | Mon | John 13 | Exodus 34 |
| 24 | Tue | John 14 | Exodus 35 |
| 25 | Wed | John 15 | Exodus 36 |
| 26 | Thu | John 16 | Exodus 37 |
| 27 | Fri | John 17 | Exodus 38 |
| 28 | Sat | John 18 | Exodus 39 |
| 29 | Sun | John 19 | Exodus 40 |
| 30 | Mon | John 20 | Leviticus 1 |
| 31 | Tue | John 21 | Leviticus 2-3 |